**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 20/2023 |
| | | P/W's | : | **PW2** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | D. கஜேந்திரன் | CASTE | : | |
| S/O | V.துரைச்சாமி | RELIGION | : | இந்து |
| VILLAGE | கல்வேலிப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 58 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.10.2025**

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வாதிகளும் நானும் கல்வேலிப்பட்டி வடக்குத்தெருவில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். 1, 2, 3 பிரதிவாதிகளும் அவர்களின் தாயார் சர்மிளாவும் கல்வேலிப்பட்டி மேற்குத்தெருவில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். சிலம்பரசன் சர்மிளா வீட்டில் வைத்து இறந்தார் என்றால் சரிதான். சிலம்பரசனின் இறுதிச்சடங்குகளை 3ம் பிரதிவாதிதான் செய்தார் என்றால் எனக்குத்தெரியாது. 1ம் வாதிக்கும் சிலம்பரசனுக்கும் எந்த தேதியில் திருமணம் நடந்தது என்று எனக்குத்தெரியாது.

2. 1ம் வாதியும் சிலம்பரசனும் எவ்வளவு காலம் பிரிந்து வாழ்ந்தார்கள் என்றால் அவர்கள் பிரிந்து வாழவில்லை. 1ம் வாதிக்கும் சிலம்பரசனுக்கும் என்ன கருத்துவேறுபாடு இருந்தது என்றால் சிறுசிறு சண்டைகள் தான் இருந்தது. 1ம் வாதி சத்துணவு அமைப்பாளராக வேலைசெய்கிறார் என்றால் சரிதான். 1ம் வாதி கணவரால் கைவிடப்பட்டவர் என்றுதான் மேற்படி வேலையை பெற்றார் என்றால் எனக்குத்தெரியாது. நான் 1ம் வாதியின் பக்கத்து வீட்டுக்காரரர் என்றால் சரிதான்.

3. 2ம் வாதியின் திருமணத்திற்கு நான் சென்றிருந்தேன். 2ம் வாதி ராஜேந்திரன் மற்றும் தேவிகா ஆகியோரின் மகனை திருமணம் செய்து உள்ளூரில்தான் வசித்து வருகிறார். 2ம் வாதியின் திருமணத்தேதி 29.08.2014 என்றால் எனக்குத்தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 2ம் வாதியின் திருமணப்பத்திரிக்கை என்றால் சரிதான். மேற்படி திருமணப்பத்திரிக்கைக்கு சாட்சி சம்பந்தமில்லாத நபர் என்று

வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு ஆட்சேபணைக்குட்பட்டு **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பி.வா.சா.ஆ.1 திருமணப்பத்திரிக்கையில் சிலம்பரசன் பெயர் இல்லை என்றால் சரிதான். மேற்படி திருமணம் நடந்த காலத்தில் 1ம் வாதியும் சிலம்பரசனும் பிரிந்து வாழ்ந்தார்கள் என்றாலும் அதனால் தான் திருமணப்பத்திரிக்கையில் அவர் பெயர் போடவில்லை என்றாலும் மேற்படி திருமணத்தில் சிலம்பரசன் கலந்து கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. சிலம்பரசனுக்கும் சர்மிளாவுக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகள் பிறந்தார்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் சமுதாய வழக்கப்படி விவாகரத்து செய்வார்கள் என்றால் சரியல்ல.

5. வாதிகள் தற்போது குடியிருக்கும் வீடு சிலம்பரசனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வாதிகள் குடியிருக்கும் வீட்டையும் 75,000 ரூபாய் பணத்தையும் வாதிகளுக்கு கொடுத்து 1ம் வாதியை சமுதாய வழக்கப்படி சிலம்பரசன் விவாகரத்து செய்தார் என்றால் எனக்குத்தெரியாது. 1ம் வாதி சிலம்பரசனுக்கு எதிராக திருப்பரங்குன்றம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன்படி நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் எனக்குத்தெரியாது. மேற்படி புகார் கொடுத்த பின்தான் சிலம்பரசன் மேற்சொன்னவாறு சமுதாய வழக்கப்படி விவாகரத்து செய்தார் என்றால் எனக்குத்தெரியாது.

6. 1ம் வாதி வாரிசு சான்றிதழ் கேட்ட மனுவை 5ம் பிரதிவாதி எதற்காக நிராகரித்தார் என்றால் எனக்குத்தெரியாது. சிலம்பரசன் சமுதாய வழக்கப்படி 1ம் வாதியை விவாகரத்து செய்துவிட்டு சர்மிளாவை 2 வதாக திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. சிலம்பரசனின் அப்பா தற்போது உயிருடன்தான் உள்ளார். நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வாதி என்னை கேட்டுக்கொண்டதால் சாட்சி அளிக்க வந்தேன். அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி எனது சமுதாயத்தை சேர்ந்தவர்கள். சிலம்பரசனுக்கு 1ம் வாதியுடன்தான் மட்டும்தான் திருமணம் நடந்தது. அவர்களுக்கு 2ம் வாதி மகளாக பிறந்தார், சிலம்பரசன் சர்மிளாவுடன் சேர்ந்து வாழ்ந்து 1 முதல் 3 பிரதிவாதிகள் பிறந்தார்கள். சிலம்பரசன் 1ம் வாதியையும் சர்மிளாவையும் திருமணம் செய்து

கொண்டார் என்றால் சரியல்ல. சிலம்பரசனுக்கு 2ம் வாதியும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் பிள்ளைகள் என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் மறு விசாரணை**

1. பி.வா.சா.ஆ.1 திருமணப்பத்திரிக்கை யார் எப்போது அச்சடித்தார்கள் என்றால் எனக்குத்தெரியாது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி